**செய்தி வெளியீடு எண் : 1702** **நாள் : 29.09.2022**

**செய்தி வெளியீடு**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் மாநில விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 3.12.2022 அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

| வ. எண் | விருதுகள் விவரம் | எண்ணிக்கை | விருது விவரம் |
|---|---|---|---|
| 1 | **சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர்**<br>1. கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC), 2.பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்(VI), 3. செவித் திறன் பாதிக்கப்பட்டோர்(HI), 4.மனவளர்ச்சி குன்றியோர்(ID), 5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD), 6. Developmental Disorder (புறவுலக சிந்தனையற்றோர்(ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD)], 7. மன நோய் (MI),<br>8. Disability caused due to blood disorder<br>இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச்சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD)],<br>9. நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு ஸதிசு பன்முகக் கடினமாதல் (MS), நடுக்கு வாதம் (PD)], 10.பல்வகை குறைபாடு [Multiple Disabilities(MD)] | 10 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | சிறந்த ஆசிரியர் – (பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், செவித் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்தல்) | 3 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித் திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்) | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 8 | பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் | 2 விருதுகள் | |
| | **மொத்தம்** | **22 விருதுகள்** | |

மேற்காணும் விருதுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், எண்.5, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை – 5 அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடமிருந்து பெற்று, அல்லது இத்துறையின் www.scd.tn.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அனைத்து சான்றிதழ்களுடன் **21.10.2022 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்பங்களை “ https://awards.tn.gov.in ” என்ற வலைத்தளத்திலும் **21.10.2022 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** பதிவேற்றம் செய்யலாம். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் பரிந்துரை இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள்
நல ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in